**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**

**ஆத்தூர்**

**------**

**அசல் வழக்கு எண்.2/2021**

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 18 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோசப் ஜான் பிரிட்டோ | ஜாதி | : | |
| த.பெ | : | மரியசூசை | தொழில் | : | விவசாய கூலி வேலை |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 57/2026 |
| தேதி | : | 18.02.2026 | | | |

**(** உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை **18** விதி **17**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது**)** பி.வா.சா.**1** அசல் வழக்கு எண். **100/2021** என்ற வழக்கிற்கு சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்ததால் அவர் இந்த வழக்கில் மீண்டும் அழைத்து விசாரிக்கப்படுகிறார்.**)**

**2ம் வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1ம் வாதி 2012ல் இறந்த பிறகு , 1ம் வாதி 02.02.2010ல் எழுதி வைத்த உயில் சாசனத்தின் அடிப்படையில் 2ம் வாதி இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 2ம் வாதி இவ்வழக்கில் சேரும் போது மேற்சொன்ன உயில் ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 2ம் வாதி இவ்வழக்கில் சேர்த்தபிறகு நீங்கள் கூடுதல் எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வின்சென்ட் அருளானந்த் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பெரியப்பா அந்தோணி மகன் ஜேசுராஜ் என்பவர் இறந்துவிட்டதால் அவருடைய மகன் வின்சென்ட் அருளானந்த் அப்போது கோயமுத்தூர் சென்றுவிட்டார். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் இருதயத்தின் பெண் வாரிசுகளோ, அந்தோணியின் பெண் வாரிசுகளோ, உங்கள் தாயார் சகோதரிகள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-1 ஆவணத்தில் ஜெர்மன் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையொப்பம் ஜெர்மன் கையொப்பம் என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**

District Munsif cum Judicial Magistrate

Athoor